முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மத்திய அரசு ஒரு சட்டத்தை இயற்றி இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த சட்டத்தைக் காட்டிலும் ஒரு மோசமான சட்டம் மத்திய அரசால் நாடாளுமன்றத்தில் இப்போது இயற்றப்பட்டிருக்கிறது. எனவே நான் மாநில அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, தமிழ் நாட்டில் தற்போது இருக்கிற இந்த சட்ட அனுகூலங்கள் கட்டடத் தொழிலாளர்களுக்கு கிடைப்பதை உத்தரவாதப்படுத்துவதற்கான வழிவகைகளை மத்திய அரசிற்குச் சொல்லி, மாநில அரசு இந்தச் சட்டத்தையே தொடர முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் கொண்டு வந்துள்ள சட்டங்களில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளை களையவும் ஏற்கனவே மாநில அரசு கொண்டு வந்துள்ள சட்டத்திலுள்ள நல்ல அம்சங்களை அந்தச் சட்டத்தில் இணைக்கவும், தொழிலாளர் சமுதாயத்தினுடைய நலனில் அக்கறையுள்ள நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தியாவினுடைய பிரதமருக்கு 26-7-1996 அன்று இதை விளக்கி, இணைக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளார்கள். இந்தத் துறையினுடைய அமைச்சர் என்ற முறையில் நானும் கடிதம் எழுதியுள்ளேன். தமிழ் நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தாலும் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அண்மையில் மத்திய அரசு சட்டத்தை இயற்றி இருக்கிறது. அந்த சட்டத்தினுடைய முழு விவரங்கள் இன்னும் நமக்கு வந்து சேரவில்லை. இதுபற்றி விவரங்கள் தேவையானால் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்.118, திரு. அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

118—

சட்ட ஆணையம் அமைத்தல்

** 1328*—**திரு. அ.லெ. சுப்பிரமணியன் :**

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் சட்ட ஆணையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும் ?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசியல் சட்டத்தின் 246-வது பிரிவின்கீழ் சட்ட ஆணையம் 9-5-1994-ல் ஏற்கனவே அமைக்கப்பட்டு விட்டது.

(ஆ) இந்தக் கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

திரு. அ.லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆணையத்தினுடைய நீதிபதியாக இருந்தவர் ராஜிநாமா செய்து விட்டதாக அறிகிறேன். அது உண்மை என்றால், விரைவில் வேறு தகுந்த நபர் அதற்கு நியமிக்கப்படுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆணையம் 9-5-1994-ல் அமைக்கப்பட்டது. இதிலே விசித்திரம் என்னவென்றால் அமைக்கப்பட்ட தினத்திலேயே, தலைவர் பொறுப்பை ஏற்றிருக்கிறார். மற்ற உறுப்பினர்கள் இரண்டு மாதம் கழித்து தான் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு 30-6-1996-ல் அவர்கள் எல்லாம் ராஜிநாமா செய்திருக்கிறார்கள். மீண்டும் ஆணையத்திற்கான உறுப்பினர்கள், தலைவர் நியமனம் குறித்து அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது.

திரு. அ.லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று உயர்நீதிமன்றம் மற்றும் கீழமை நீதிமன்றங்களில் உரிமையியல், குற்றவியல் வழக்குகள் பல ஆண்டுகாலமாக தேங்கிக் கிடக்கின்றன. அதைப்போல மோட்டார் ஆக்சிடென்ட் ட்ரிபியூனல், லேபர் கோர்ட் போன்ற தீர்ப்பாயங்களில் வழக்குகள் தேங்கி இருக்கின்றன. அதைப்போல கீழமை நீதிமன்றங்களில் உள்ள நீதிபதிகளுக்கு சம்பள உயர்வு, சர்வீஸ் கண்டிஷன் மேம்படுத்தல் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது துணைக் கேள்வியா ?

திரு. அ.லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் பற்றி கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

திரு. அ.லெ. சுப்பிரமணியன் : அடிக்கடி காவல் துறைக்கும் வழக்கறிஞர்களுக்கும் இடையில் நடக்கிற மோதல்களைத் தடுக்க வழிவகை கோருதல் போன்ற சப்ஜெக்ட்களை 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்சாக ' இந்த லா கமிஷனுக்கு ஏற்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆணையத்திற்கு 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்'-ல் தேங்கிக் கிடக்கிற வழக்குகளுக்கு எப்படித் தீவிரமாகத் தீர்வு காண்பது என்பதும் ஒரு அம்சமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்.119, திரு. வி.பி. இராசன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

119—

எடையாளர்களின் சம்பளத்தை உயர்த்துதல்

* *453*— **திரு. வி.பி. இராசன் :**

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் எடையாளர்களின் சம்பளத்தை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன், கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.பி. இராசன்.

திரு. வி.பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் பணிபுரிகிற எடையாளர்களுக்குச் சம்பளம் உயர்த்தும் குறிப்பு அரசிடம் இல்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். நியாய விலைக் கடைகளில் பணிபுரிகிற